# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்தில் தற்போது காலியாகவுள்ள அங்கன்வாடி பணியாளர்கள், குறு மைய அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் பணியிடங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இனச்சுழற்சி முறையில் தகுதி வாய்ந்த பெண்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | காலிபணியிட எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | அங்கன்வாடி பணியாளர்கள் | 1268 | 2500–5000+ ரூ.500 மற்றும் இதரப்படிகள் |
| 2. | குறு மைய அங்கன்வாடி பணியாளர்கள் | 38 | 1800–3300+ ரூ.400 மற்றும் இதரப்படிகள் |
| 3. | அங்கன்வாடி உதவியாளர்கள் | 1210 | 1300–3000+ ரூ.300 மற்றும் இதரப்படிகள் |

அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் குறுமைய அங்கன்வாடி பணியாளர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பிப்போர் SSLC தேறியவராகவும், 01.07.17 அன்று 25 வயது முதல் 35 வயது வரை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். மாற்றுதிறனாளிகளுக்கு 38 வயது வரை தளர்வு அளிக்கப்படும். விதவை, கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு 40 வயது வரை தளர்வு வழங்கப்படும். மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு குறைந்தபட்ச வயது 20 வயது ஆகும். மேலும் குறைந்தபட்ச கல்வி தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி ஆகும்.

அங்கன்வாடி உதவியாளர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பிப்போர் தமிழில் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும். 01.07.17 அன்று 20 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்களாக இருக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு 43 வயது வரை தளர்வு அளிக்கப்படும். விதவை, ஆதரவற்ற விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர் மற்றும் மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு 45 வயது வரை தளர்வு அளிக்கப்படும்.

ஊரக பகுதிகளில் அங்கன்வாடி மையம் காலியாக உள்ள அதே கிராமத்தில் வசிக்கும் தகுதியான நபர்களாகவும், அவர்களில் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர் எனில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். உள்ளூரில் தகுதியான நபர்கள் இல்லாத பட்சத்தில் மையம் அமைந்துள்ள அதே கிராம பஞ்சாயத்தை சேர்ந்த அருகாமையிலுள்ள பிற கிராமங்களிலிருந்து தகுதியான நபர்கள் பரிசீலிக்கப்படுவர். இவர்களிலும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அவ்வாறு அதே பஞ்சாயத்தை சார்ந்த பிற கிராமங்களில் தகுதியான விண்ணப்பதாரர் இல்லாத பட்சத்தில் மையத்திலிருந்து 10 கி.மீ.தூரம் வரை உள்ள பிற பஞ்சாயத்தை சார்ந்த விண்ணப்பதாரர்கள் பரிசீலிக்கப்படுவர். இவர்களிலும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நகர் பகுதிகளில் அங்கன்வாடி மையம் காலியாக உள்ள அதே வார்டில் வசிக்கும் தகுதியான நபர்களாகவும் அவர்களில் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர் எனில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தகுதியான நபர் அதே வார்டில் இல்லாவிடில் அருகிலுள்ள பிற வார்டுகளை சேர்ந்தவர் பரிசீலிக்கப்படுவர். தகுதியான நபர் அருகிலுள்ள வார்டிலும் இல்லாதபட்சத்தில் அதே கோட்டத்தை / நகராட்சி / பேரூராட்சியை சார்ந்தவர் பரிசீலிக்கப்படுவர். அனைத்து பிரிவுகளிலும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

காலிப்பணியிட மையங்கள் குறித்த பட்டியல், ஒதுக்கீடு செய்யப்பட்ட வகுப்பு, பணிநியமன விதிமுறைகள், மாதிரி விண்ணப்ப படிவம், விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டிய அலுவலகம் போன்றவை வேலூர் மாவட்ட இணையதளத்தில் www.vellore.tn.nic.in வெளியிடப்பட்டுள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட குழந்தைவளர்ச்சி திட்ட அலுவலக விளம்பர பலகையிலும் இவை வெளியிடப்பட்டுள்ளது.

ஊரகப்பகுதிகளில் உள்ள மையங்களுக்கு நகர்புற பகுதிகளில் வசிப்பவர்களும், நகர்புற பகுதிகளில் உள்ள மையங்களுக்கு ஊரக பகுதிகளில் வசிப்பவர்களும் விண்ணப்பிக்க இயலாது.

விண்ணப்பதாரரிடம் வசிப்பிட ஆதாரமாக கீழ்கண்ட ஏதேனுமொரு சான்று கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

- ❖ வாக்காளர் அடையான அட்டை
- ❖ வீட்டு வரி இரசீது (விண்ணப்பதாரர் பெயரில் இருக்க வேண்டும்)
- ❖ குடும்ப அட்டை
- ❖ ஆதார் அட்டை

மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களில் கை/கால் ஊனம் (Locomotor disability) உள்ளவர் மட்டும் விண்ணப்பிக்கலாம். பிற மாற்று திறனாளிகள் விண்ணப்பிக்க இயலாது.

அங்கன்வாடி பணியாளர் / அங்கன்வாடி உதவியாளர் பணி நியமனம் தொடர்பாக ஆகஸ்ட்–2014–ல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, ஏற்கனவே விண்ணப்பித்திருந்தவர்கள் தற்போது மீண்டும் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்பணிநியமனத்திற்கென பிரத்தியோகமான விண்ணப்படிவம் வேலூர் மாவட்ட இணைய தளத்திலும் சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக விளம்பரப்பலகையில் வைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தில் உள்ளவாறு விண்ணப்பங்கள் தயார் செய்து அதில் விவரங்களை பூர்த்தி செய்து பிறந்த தேதி, கல்வித்குதி, ஜாதிச்சான்று, இருப்பிடச் சான்று, குடும்ப அட்டையின் நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் எனில் அதற்கான சான்று, வருமானச்சான்று உள்ளிட்ட அனைத்து சான்றுகளின் நகல்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 30.08.17 அன்று மாலை 5.00 மணி வரை சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சம்பந்தப்பட்ட குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம் தவிர பிற அலுவலகங்களில் விண்ணப்பங்கள் பெறப்படமாட்டாது.

தற்போது வெளியிடப்டும் பணியிடங்களுக்கு மட்டுமே விண்ணப்பங்கள் பெறப்படும். மேலும் இந்த மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வகுப்பை சார்ந்தவர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். பிற பணியிடங்கள் மற்றும் பிற வகுப்பினரின் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு குறித்த விவரம் சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் மூலம் பின்னர் தெரிவிக்கப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக